20th November 1963]

உதவியளிக்க அரசாங்கம் அனுமதித்துள்ளது. 2 நயா பைசாவுக்கு மேல் உதவியளிக்க விரும்பும் பஞ்சாயத்துக்கள் சில நிபந்தனைகளுக்குட்பட்டு உதவி செய்யலாம். இத்திட்டம் சம்பந்தமாக பஞ்சாயத்துக்கள் வழங்கும் உதவித் தொகை விதங்கள் வித்தியாசப்படுவதற்கு இதுதான் காரணம். இது சம்பந்தமான உத்தரவுகளைத் திருத்தும் உத்தேசம் இல்லை.

(*a*) *to* (*c*): The Government have allowed Panchayats to contribute at the rate of 2 nP. per meal per child towards the midday meal scheme, from their resources. The Panchayats which desire to contribute a larger share than 2 nP. are free to do so subject to certain conditions. Hence the variation in the rates of contributions of Panchayats towards the scheme. There is no proposal to revise the orders in the matter.

* 328 கேள்வி.—**திரு. முனு ஆதி**: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள தேசிய நெருக்கடியின் காரணமாக பள்ளி ஆசிரிய, ஆசிரியைகள் மதிய உணவுத்திட்டத்திற்கு நன்கொடை வசூலிக்க இயலாமலிருப்பது அரசாங்கம் அறியுமா?

(இ) ஆம் எனில், அவ்வாறு நன்கொடையாக வசூலிக்க வேண்டிய தொகையை அரசாங்கமே தேசிய நெருக்கடி திரும்வரை அளிக்க உத்தேசமுண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) மதிய உணவு திட்டத்திற்கான நன்கொடை மதிய உணவு குழுக்கள்தான் வசூலிக்க வேண்டுமே அன்றி பள்ளி ஆசிரியர்கள் அல்ல.

(இ) கேள்விக்கு இடமில்லை.

(*a*) The Midday Meal Committees and not the teachers are expected to collect donations for the midday meal scheme.

(*b*) Does not arise.

* 329 கேள்வி.—**திரு. முனு ஆதி**: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதிய உணவு திட்டத்தின்கீழ், வழங்கப்பெறும் CARE பொருள்களை அந்த வட்டத்திலுள்ள பள்ளிகளுக்கு அரசாங்கமே தன் செலவில் அனுப்பி வைக்கிறதா?

(இ) இல்லையெனில் அதனை எடுத்துச் செல்ல ஆகும் செலவிற்கு பொறுப்பு யார்?

(உ) பள்ளிகளின் பொறுப்பெனில், அங்ஙனம் ஆகும் செலவுத் தொகை எந்தக் கணக்கில் சேர்க்கப்படுகிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ), (இ) &(உ) 'கேர்' பொருள்கள் சென்னைத் துறைமுகத்திலிருந்து பள்ளித் துணை ஆய்வாளர் காரியாலயங்கள் வரை அரசாங்க செலவில் அனுப்பப்படுகிறது. மதிய உணவுக் குழுக்களின் செயலாளர்கள் அவர்களுக்கு வேண்டிய